**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025–ம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ஆம் நாள் சனிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2055, ஸ்ரீகுரோதி வருடம், மார்கழித்திங்கள் 20 ம் நாள்

**இ.ம.எண். 3/2024**

**in**

**அ.வ.எண். 303/2017**

சுவாமிநாதன் ரெப் பை
பவர் ஏஜெண்ட்/தாயார் நல்லமுத்து ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. தமிழ்நாடு அரசுக்காக அதன் மாவட்ட ஆட்சியர், திருப்பூர்
2. தாசில்தார், காங்கயம்
3. புத்தி சுவாதீனம் இல்லாத சரஸ்வதிக்காக
   ரெப் பை கார்டியன் கனகாம்பரம்
4. வரதராஜ்
5. விஜயா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 19.12.2024 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.யுவஸ்ரீ, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர்/3 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ஈஸ்வரமூர்த்தி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 5 ம் எதிர்மனுதாரர்/5 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.M.P.சிவசாமி, M.Com., M.L., அவர்கள் ஆஜராகியும், 1, 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள்/1, 2 மற்றும் 4 பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு

தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

**உத்தரவு**

மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவில் கண்டுள்ள விபரப்படி வழக்குரையை திருத்தம் செய்துகொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :–**

i) இம்மனுவின் மனுதாரர் வாதியின் தாயாரான பவர் ஏஜென்ட் ஆவார். அசல் வழக்கானது இறந்துபோன பழனிச்சாமி என்பவருக்கு வாதி மற்றும் 3ம் பிரதிவாதி மட்டும் தான் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii) அசல் வழக்கானது நிலுவையில் இருக்கும்போது வாதி ஜப்பான் நாட்டின் டோக்கியோவில் கணினி பொறியாளராக சேர்ந்துள்ளார். மேற்படி வாதி இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு முன்பு தனது தாயாரான நல்லமுத்து என்பவருக்கு 15.06.2022 தேதியிட்ட வெள்ளகோவில் சார்பதிவக ஆவண எண்.16/2022 ஆக பதிவு செய்யப்பட்ட பவர் பத்திரத்தை ஏற்படுத்திக் கொடுத்து வழக்கை நடத்த அனுமதி அளித்துள்ளார். வாதி வெளிநாட்டில் தங்கி இருப்பதால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி வழக்கு தொடர முடியவில்லை. அதனால் மனுதாரரை வாதியின் பவர் ஏஜென்டாக நியமிக்ககோரி இ.ம.எண்.817/2022

மனுவானது தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது கடந்த 15.06.2023 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

iii) இந்நிலையில் மூன்றாம் நபரான விஜயா என்பவரை இவ்வழக்கில் கட்சி சேர்க்கக்கோரி இ.ம.எண்.192/2020 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது கடந்த 10.08.2023 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே இ.ம.எண்.192/2020 மனுவின் உத்தரவின்படியும் இம்மனுவில் கண்டுள்ள விபரப்படியும் அசல் வழக்கை திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2) 5ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைச் சுருக்கம்:–**

i) மனுதாரர் மனு பொய்யானது, மோசடியானது, சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. எதிர்மனுதாரர் இம்மனுவில் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவராவார்கள்.

ii) மனுதாரர் மேற்படி வழக்கில் தன்னை வாதியின் பவர் ஏஜெண்டாக நியமிக்க கோரி இ.ம.எண்.817/2022 மனு தாக்கல் செய்து கடந்த 15.06.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டதும், அதேபோல் மூன்றாம் நபரான 4ம் எதிர்மனுதாரரின் தாயாரான விஜயா மேற்படி வழக்கில் தன்னை தரப்பினராக சேர்க்க கோரி இ.ம.எண்.192/2020 மனு தாக்கல் செய்து மேற்படி மனுவும் கடந்த 10.08.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டது என்பதும் உண்மை.

iii) ஆனால் மனுதாரர் மேற்படி மனுவில் திருத்தல் விபரத்தில் ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட இ.ம.எண்.192/2020 மனு சங்கதிகளுக்கு முரணாக 5ம் எதிர்மனுதாரரையும் அவரது மகனான 4ம் எதிர்மனுதாரரையும் தவறாக சித்தரித்து அசல் வழக்கை திருத்த அனுமதி கோரியுள்ளார். மேற்படி இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட மனு சங்கதிகளுக்கு முரணாக அசல் வழக்குரையை திருத்தம் செய்ய இயலாது.

iv) மேலும் மனுதாரர் மேற்படி இ.ம.எண்.192/2020 மனுவில் மேற்படி விபரங்களை குறிப்பிட்டு எதிருரை தாக்கல் செய்து மேற்படி மனுவை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் அல்லது அவ்வாறு திருத்த அனுமதி பெற்றிருக்க வேண்டும். அதனை தவிர்த்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்ட நிலையில் மேற்படி மனு சங்கதிகளுக்கு முரணாக திருத்தம் கோரி உபயதரப்பினரை சேர்க்காமல் இ.ம.எண்.2/2023 மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவில் மனுதாரரின் மகனான 4ம் எதிர்மனுதாரர் மேற்படி விபரங்களை கூறி எதிருரை தாக்கல் செய்து பின்பு மேற்படி மனுவை வாபஸ் பெற்றுவிட்டு மீண்டும் பொய்யான சங்கதிகளை கூறி இ.ம.எண்.192/2020 மனு சங்கதிகளுக்கு முரணாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையது அல்ல.

v) எதிர்மனுதாரர் தாக்கல் செய்த இ.ம.எண்.192/2020 மனுவில் எதிர்மனுதாரரின் கணவர் பெயர் பழனிசாமி என்று தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையிலும் மனுதாரர் ஏற்கனவே தாக்கல் செய்துவிட்டு திரும்ப பெற்ற இ.ம.எண்.2/2024 மனுவில் மேற்படி விஜயாவை பழனிசாமி மனைவி என்று திருத்தம் கோரிவிட்டு தற்போது இந்த எதிர்மனுதாரரை கணவர் பெயர் தெரியவில்லை சுமார் 60 வயதுள்ள விஜயா என்று திருத்தம் கோரியுள்ளார்.

மேற்படி முரண்பட்ட சங்கதிகளில் இருந்தே மனுதாரரின் கோரிக்கை தவறானது என்பது தெரிய வருகிறது.

vi) மனுதாரர் மேற்படி திருத்தல் மனுவில் கண்ட சங்கதிகளை அசல் வழக்கில் சேர்க்க உரிய அனுமதி பெறாமல் மேற்படி சங்கதிகளைப் பொறுத்து எந்தவித திருத்தமும் கோர இயலாது. மனுதாரர் மேற்படி சங்கதிகளை மெய்ப்பிக்க எந்தவித ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதனால் மனுதாரர் மனுவில் கண்டுள்ளபடி திருத்தம் கோர இயலாது. அதனால் மனுதாரரின் மேற்படி சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுதாரரின் மனுவை 5ம் எதிர்மனுதாரரின் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 5ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரைச் சுருக்கமாகும்.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

<u>5. தீர்வு:–</u>

6. மனுதாரர் தரப்பில் அசல் வழக்கானது நிலுவையில் இருக்கும்போது வாதி தனது தாயாரான நல்லமுத்து என்பவருக்கு 15.06.2022 தேதியிட்ட பவர்

பத்திரத்தை ஏற்படுத்திக் கொடுத்து வழக்கை நடத்த அனுமதி அளித்துள்ளார் என்றும் வாதி வெளிநாட்டில் தங்கி இருப்பதால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி வழக்கு தொடர முடியவில்லை என்றும் அதனால் மனுதாரரை வாதியின் பவர் ஏஜென்டாக நியமிக்ககோரி இ.ம.எண்.817/2022 மனுவானது தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது கடந்த 15.06.2023 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் இந்நிலையில் மூன்றாம் நபரான விஜயா என்பவரை இவ்வழக்கில் கட்சி சேர்க்கக்கோரி இ.ம.எண்.192/2020 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது கடந்த 10.08.2023 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே இ.ம.எண்.192/2020 மனுவின் உத்தரவின்படியும் இம்மனுவில் கண்டுள்ள விபரப்படியும் அசல் வழக்கை திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

7. 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த இ.ம.எண்.192/2020 மனுவில் எதிர்மனுதாரரின் கணவர் பெயர் பழனிசாமி என்று தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையிலும் மனுதாரர் ஏற்கனவே தாக்கல் செய்துவிட்டு திரும்ப பெற்ற இ.ம.எண்.2/2024 மனுவில் மேற்படி விஜயாவை பழனிசாமி மனைவி என்று திருத்தம் கோரிவிட்டு தற்போது இந்த எதிர்மனுதாரரை கணவர் பெயர் தெரியவில்லை சுமார் 60 வயதுள்ள விஜயா என்று திருத்தம் கோரியுள்ளார் என்றும் மேற்படி முரண்பட்ட சங்கதிகளில் இருந்தே மனுதாரரின் கோரிக்கை தவறானது என்றும் மனுதாரர் மேற்படி திருத்தல் மனுவில் கண்ட சங்கதிகளை அசல் வழக்கில் சேர்க்க உரிய அனுமதி பெறாமல் மேற்படி சங்கதிகளைப் பொறுத்து எந்தவித திருத்தமும் கோர இயலாது என்றும் மனுதாரர் மேற்படி சங்கதிகளை மெய்ப்பிக்க எந்தவித ஆவணங்களும்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் காலம்சென்ற பழனிச்சாமிக்கு வாதி மற்றும் 3ம் பிரதிவாதி மட்டும்தான் சட்டப்படியான வாரிசு என்று விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 03.04.2018 அன்று 3ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு கடந்த 22.10.2019 அன்று அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு கடந்த 07.11.2019 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 ஆவணம் மற்றும் கடந்த 18.11.2019 அன்று வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 10.12.2019 அன்று வா.சா.2 விசாரிக்கப்பட்டு, பின்னிட்டு கடந்த 10.02.2020 அன்று மூன்றாம் தரப்பினரான விஜயா என்பவர் தன்னை 5ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கக்கோரி இ.ம.எண்.192/2020 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது கடந்த 10.08.2023 அன்று அனுமதிக்கப்பட்டு, கடந்த 25.04.2024 அன்று அசல் வழக்கில் திருத்தம் செய்ய அனுமதிகோரி மனுதாரரால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தல் மனுவில் நெடுந்தலைப்பில் வாதியின் பொது அதிகாரம் பெற்ற முகவர்/தாயார் நல்லமுத்து என்பவரின் முகவரியும், 5ம் பிரதிவாதியான விஜயா என்பவரின் முகவரியும் சேர்க்க வேண்டும் என்றும் இவ்வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ள 5ம் பிரதிவாதியானவர் வழக்கின் 4ம் பிரதிவாதியின் தாயார் ஆவார். 5ம் பிரதிவாதியான விஜயா ஏற்கனவே வேறு ஒரு நபருடன் திருமணமாகி அவருக்கும், 5ம் பிரதிவாதிக்கும் 4ம் பிரதிவாதி மகனாக பிறந்த பிறகு 5ம்

பிரதிவாதியானவர் மேற்படியாரை விட்டு பிரிந்து வந்த நபர் ஆவார். பின்னிட்டு 5ம் பிரதிவாதி காலம் சென்ற வாதியின் தகப்பனார் பழனிச்சாமியுடன் மனைவி என்ற அந்தஸ்து இல்லாமல் சேர்ந்து தனது மகனான 4ம் பிரதிவாதியுடன் வந்து சேர்ந்து வாழ்ந்த நபர் என்றும் 4ம் பிரதிவாதியானவர் 5ம் பிரதிவாதிக்கும் காலம் சென்ற வாதியின் தகப்பனார் பழனிச்சாமிக்கும் பிறந்த குழந்தையல்ல. மேற்படியார்கள் காலம் சென்ற பழனிச்சாமியின் சொத்தில் உரிமை கோருவதற்காக பொய்யாக தங்களை உருவகப்படுத்தி வழக்காடி வருகின்றனர். இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியான சரஸ்வதி மனைவியாக இருக்கும்போது தற்பொழுது வழக்கில் சேர்ந்துள்ள 5ம் பிரதிவாதி எவ்விதத்திலும் மனைவி என்ற அந்தஸ்தில் உரிமை கோர உரிமையற்றவர் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

10. 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.192/2020 மனுவில் எதிர்மனுதாரரின் கணவர் பெயர் பழனிசாமி என்று தெளிவாக குறிப்பிட்டுவிட்டு தற்போது இந்த எதிர்மனுதாரரை கணவர் பெயர் தெரியவில்லை என்றும், மேற்படி திருத்தல் மனுவில் 5ம் எதிர்மனுதாரரையும் அவரது மகனான 4ம் எதிர்மனுதாரரையும் தவறாக சித்தரித்து அசல் வழக்கில் திருத்தம் செய்ய இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தாலும் மேற்படி சங்கதிகளை பொறுத்து அசல் வழக்கில் இரு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு பின்னிட்டு இறுதியில் தான் தீர்மானிக்க இயலுமே தவிர அசல் வழக்கில் திருத்தம் செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் அதைப் பொறுத்து தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள மேற்படி சங்கதிகளைப் பொறுத்து அசல் வழக்கில் நிரூபணம் செய்யும் பொறுப்பு மனுதாரர் வசமே உள்ளது.

11. எனவே மேலே கண்ட பரிசீலனையின் அடிப்படையிலும் இம்மனுவில் கண்டுள்ள திருத்தங்கள் அசல் வழக்கின் அடிப்படையை தன்மையை மாற்றும் வகையில் இல்லை என்பதாலும் மற்றும் புதிய வழக்கு மூலத்தை தோற்றுவிக்கும் வகையில் இல்லை என்பதாலும் இம்மனுவில் கண்டுள்ள மேற்படி திருத்தங்கள் அசல் வழக்கில் செய்யப்படும் பட்சத்தில் தான் வழக்கை மேற்கொண்டு நடத்த முடியும் என்று மனுதாரர் தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக உள்ளதாலும் அசல் வழக்கில் மனுதாரர் கோரும் திருததல் சங்கதிகளைப் பொறுத்து நிரூபணம் செய்யும் பொறுப்பு மனுதாரர் வசமே உள்ளது என்பதாலும் தரப்பினர்களுக்கிடையேயுள்ள பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் தமது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரருக்கு போதிய வாய்ப்பை வழங்க வேண்டியது நீதியின்பால் அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் மேலே கண்ட விவாதங்களின்படியும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025–ம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.01.04 19:01:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.01.04 19:01:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.